ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களுக்கு மானியம் வழங்குதல்.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.3) துறை**

**அரசாணை (பத்தாண்டு) எண். 23** **நாள்: 10.1.2008.**

**படிக்கப்பட்டவை:**

1. மானிய கோரிக்கை எண்.42, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, 2007–2008, அசாகு எண்.30591/07/பட்ஜெட்–4, நாள் 25.4.2007.
2. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ், சென்னை–15, கடித எண்.35871/07/பரா.அ.3.1, நாள் 8.10.07.

********

**ஆணை:–**

ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின், மானிய கோரிக்கை எண்.42ல், நடப்பு நிதியாண்டு 2007–2008 வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் (Budget Estimate), உள்ளாட்சி மன்றங்களின் மருந்தகங்களுக்கு ரூ.6,94,800/– மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. 110 பகுதி நேர ஊரக மருந்தகங்களுக்கு ஆண்டு மான்யமாக ரூ.2040/– வீதம் ரூ.2,24,400/–ம் 87 முழுநேர மருந்தகங்களுக்கு மான்யமாக ரூ.5400/– வீதம் ரூ.4,69,800/– ஆகவும் மொத்தம் ரூ.6,94,200 தேவைபடுகிறது என்றும், மான்ய கோரிக்கை எண்.42, ஊரக வளர்ச்சித் துறை 2007–08 ஆண்டு வரவு–செலவு மதிப்பீட்டில் (Budget Estimate) ரூ.6,94,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, மேற்கண்ட நிதியினை விடுவிக்குமாறு பார்வை 2ல் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ், இயக்குநர் அரசிடம் கோரி உள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநரின் செயற்குறிப்பினை, அரசு கவனமாக ஆய்வு செய்து, அவரது செயற்குறிப்பை ஏற்று ரூ.6,94,000/– (ரூபாய் ஆறு இலட்சத்து தொண்ணூற்று நான்கு ஆயிரம் மட்டும்) ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

| | |
|---|---|
| உள்ளாட்சி மன்றங்களின் மருந்தகங்களுக்கு பராமரிப்பு மானியம் | ரூ.6,94,000/– |
| மொத்தம் | ரூ.6,94,000/– |

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை, கீழே குறிப்பிட்டுள்ள கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2210 – மருத்துவமும் பொது சுகாதாரமும் 03 – ஊரக சுகாதாரப்பணிகள் –
ஆங்கில முறை மருத்துவம் 110 – மருத்துவமனைகளும் மருந்தகங்களும்
1. திட்டத்தில் சேராதது. BS – உள்ளாட்சி மன்றங்களின்
மருந்தகங்களுக்குப் பராமரிப்பு மானியம். 09 – உதவி மானியம்
01 – நடப்புச் செலவுக்கான மானியங்கள்
(த.தொகு எண்.2210–03–110–BS–0910)

5. மேலே ஒப்பளிக்கப்பட்டுள்ள, உள்ளாட்சி மன்றங்களின் மருந்தகங்களுக்கான மானியத் தொகையை பெற, இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் அ.சா.கு.எண்.82628, நாள் 9.1.2008ல் தெரிவித்துள்ள ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு செயலாளர்.